அரியலூர் மாவட்டம், அரியலூர் மாவட்ட மைய நூலகத்தில் தமிழ்நாடு அரசு பொது நூலகத்துறை, அரியலூர் மாவட்ட நூலக ஆணைக்குழு சார்பில், பொதுப்பணித்துறையின் மூலம் கட்டப்பட்டுள்ள போட்டித் தேர்வு மாணவ, மாணவிகளுக்கான பயிற்சி மையத்தினை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ. இரத்தினசாமி. அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் மற்றும் பலர் உள்ளனர்.

யு.பி.எஸ்.சி. தேர்வில் மாணவர் சிவச்சந்திரன் முதலிடம்!

நான் முதல்வன் திட்டம்: முதல்வர் மு.க.ஸ்டாலின் மகிழ்ச்சி - பாராட்டு!

சென்னை, ஏப்.24-

"நான் முதல்வன்" திட்டத்தில் பயிற்சி பெற்ற மாணவர் சிவச்சந்திரன் UPSC தேர்வில் அகில இந்திய அளவில் 23-வது இடமும், தமிழ்நாட்டு தரவரிசையில் முதலிடமும் பெற்று சாதனை படைத்ததற்காக வாழ்த்து தெரிவித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

எது மகிழ்ச்சி?

நான் மட்டும் முதல்வன் அல்ல; தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொருவரும் முதல்வனாக என் பிறந்தநாளில் தொடங்கி வைத்த "நான் முதல்வன்" திட்டத்தில் பயிற்சி பெற்ற மாணவர் UPSC தேர்வில் தமிழ்நாட்டுத் தரவரிசையில் முதல்வனாகியிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது!

பல்லாயிரக்கணக்கான மாணவர்களின் திறன்களை மேம்படுத்தும் இந்தத் திட்டம், வருங்காலங்களில் இலட்சக்கணக்கானோரின் வாழ்வில் ஒளியேற்றிடும் என்ற நம்பிக்கை என் மகிழ்ச்சியாகியுள்ளது!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

சங்கரன்கோவில் பணிமனையில் ரூ.20 லட்சத்தில் தரைத்தளத்திற்கு அடிக்கல்!

மகளிர் விடியல் பயணம் பேருந்தில் டிஜிட்டல் பரிவர்த்தனை மூலம் டிக்கெட்!

அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் பேச்சு!

தென்காசி ஏப்.24-

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலில் திருவேங்கடம் சாலையில் உள்ள தற்காலிக பேருந்து நிலையத்தில் இருந்து வழித்தடங்களுக்கு மகளிர் விடியல் பயணம் புதிய பேருந்து சேவைகளை போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்து, சங்கரன்கோவில் பணிமனையில் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் தரைத்தளத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் தற்காலிக பேருந்து நிலையத்தில் இருந்து 7 பேருந்து மற்றும் வாசுதேவநல்லூர் ஊராட்சி ஒன்றியம் சங்குபுரத்தில் இருந்து 1 பேருந்து ஆக மொத்தம் 8 மகளிர் விடியல் பயணம் புதிய பேருந்து சேவையை மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணிஸ்ரீகுமார், தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் ஈ.ராஜா வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் சதன்திருமலைக்குமார் ஆகியோர் முன்னிலையில் போக்குவரத்து துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் புதிய பேருந்து சேவைகளை கொடியசைத்து துவக்கி வைத்தார். அதனை தொடர்ந்து சங்கரன்கோவில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து பணிமனையில் தரை தளத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

பின்னர் பணிமனையில் பேருந்து துவக்க விழா மற்றும் பணிமனை தரைத்தளம் அடிக்கல் நாட்டு விழா நிகழ்வு மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர் தலைமையில், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீ குமார், தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. வாசுதேவநல்லூர் சதன் திருமலை குமார் எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

நெல்லை அரசு போக்குவரத்துக் கழகம் மேலாண்மை இயக்குனர் தசரதன் வரவேற்புரையாற்றினார்.

இந்நிகழ்வில் அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் தெரிவித்ததாவது,

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் தனியார் பேருந்துகளை அரசுடைமையாக்கி பேருந்துகள் செல்லாத பகுதிகளுக்கும் பேருந்துகள் செல்ல வழி வகுத்து, போக்குவரத்து கழகத்தை நாட்டுடைமையாக்கியுள்ளார். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட மகளிர், மாற்றுத்திறனாளிகள் உதவியாளர் மற்றும் திருநங்கைகள் ஆகியோர் தமிழ்நாடு முழுவதும் சாதாரண கட்டண நகர பேருந்து களில் கட்டணம் இல்லாமல் பயணம் செய்யும் "விடியல் பயண திட்டம்'' (08.05.2021) முதல் நடைமுறைப்படுத் தப்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாட்டில் தான் அரசு போக்குவரத்து துறை மிக சிறப்பாக செயல்பட்டு வருகிறது. சுமார் 20,000 பேருந்துகள் அரசால் இயக்கப்பட்டு கொண்டிருக்கும் ஒரே மாநிலம் தமிழ்நாடு மட்டும்தான்.

போக்குவரத்து துறை வளர்ச்சியில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது. முத்தமிழ் அறிஞர் கலைஞர் வழியில் ஆட்சி நடத்தி வரும் திராவிட மாடல் முதலமைச்சர் அவர்கள் முதல்வராக பொறுப்பேற்றவுடன் முதலில் கையெழுத்திட்ட விடியல் பயணத் திட்டத்தின் மூலம் இன்று மகளிர் பல் வேறு விதங்களில் முன்னேறி உள்ளனர்.

தென்காசி மாவட்டத்தில் தென்காசி, செங்கோட்டை, சங்கரன்கோவில், புளியங்குடி என 4 கிளைகள் செயல்பட்டு வருகிறது. இக்கிளைகளிலிருந்து 80 நகர பேருந்துகளும், 150 புறநகர பேருந்துகளும் என 230 பேருந்துகள் இயக்கப்பட்டு வருகிறது. இதில் 78 பேருந்துகள் மகளிர் விடியல் பயண பேருந்துகளாக இயக்கப்படுகிறது.

தென்காசி மாவட்டத்தில் மகளிர் விடியல் பயண பேருந்துகளில் நாளொன்றுக்கு சராசரியாக 65,000 மகளிர் பயணம் செய்து, பயனடைந்து வருகின்றனர். இதனால் மகளிர்க்கு மாதம் ரூ.1000/- சேமிப்பாக உள்ளது. பெண்களுடைய வாழ்வில் இத்திட்டம் ஒரு புத்துணர்ச்சியை தந்துள்ளது.

தென்காசி மாவட்டத்திற்கு 2022-2023 ஆம் ஆண்டில் 65 புனரமைக்கப்பட்ட பேருந்துகளும், 2023-2024 ஆம் ஆண்டில் 39 புதிய பேருந்துகளும் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டு தடத்தில் இயக்கப்பட்டுள்ளது. 2024-2025 ஆம் ஆண்டில் 18 புதிய பேருந்துகள் ஒதுக்கீடு தடத்தில் இயக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், திருநெல்வேலி கோட்டத்தில் 813 நகர பேருந்துகளும், 794 புறநகர பேருந்துகளும் என மொத்தம் 1607 பேருந்துகள் இயக்கப்பட்டு வருகிறது. இதில் 662 மகளிர் விடியல் பயண பேருந்துகளாக இயக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், திருநெல்வேலி கோட்டத்திற்கு 2022-2023 ஆம் ஆண்டில் 302 புனரமைக்கப்பட்ட பேருந்துகளும், 2023-2024 ஆம் ஆண்டில் 219 புதிய பேருந்துகளும் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டு தடத்தில் இயக்கப்பட்டுள்ளது. 2024-2025 ஆம் ஆண்டில் 192 புதிய பேருந்துகள், 25 புதிய தாழ்தள பேருந்துகளும், 63 கூண்டு கட்டப்பட்ட புதிய பேருந்துகளும் ஒதுக்கீடு செய்யப்பட்டு 95 பேருந்துகள் கூண்டு கட்டப்பட்டு தடத்தில் இயக்கப்பட்டுள்ளது. இன்று புதியதாக 8 புதிய பேருந்துகள் இயக்கப்பட உள்ளது. மீதமுள்ள 89 பேருந்துகள் கூண்டு கட்டும் பணி நடைபெற்று வருகிறது. விரைவில் தடத்தில் இயக்கப்படும். 2025 -2026 ஆம் ஆண்டிற்கு 224 புதிய பேருந்துகள், 107 புனரமைக்கப்பட்ட பேருந்துகள், 102 முகச்சீரமைப்பு பேருந்துகள் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுநாளது வரை மொத்தம் அரசால் திருநெல்வேலி கோட்டத்திற்கு 723 புதிய பேருந்துகள், 409 புனரமைக் கப்பட்ட பேருந்துகள், 102 முகச்சீரமைப்பு பேருந்துகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தொடர்ந்து, தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து பணிமனையில் சங்கரன்கோவில் சட்டமன்ற தொகுதி நிதியிலிருந்து ரூ.20 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு தரைத்தளத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் தனது நிதியிலிருந்து ரூபாய் 20 லட்சம் தருவதாக கூறியுள்ளார்.

இவ்வாறு அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் தெரிவித்தார்.

நிகழ்வில் போக்குவரத்து துறை இணை இயக்குனர் ரவிச்சந்திரன் பொது மேலாளர் (தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், திருநெல்வேலி) சரவணன், சங்கரன்கோவில் வருவாய் கோட்டாட்சியர் கவிதா, வட்டார போக்குவரத்து அலுவலர் செல்வி, சங்கரன்கோவில் நகர்மன்ற தலைவர் உமாமகேஸ்வரி, ஊராட்சி ஒன்றியக் குழு தலைவர்கள் லாலா சங்கரபாண்டியன் (சங்கரன்கோவில்) பொன்.முத்தையாபாண்டியன் (வாசுதேவநல்லூர்) தொ.மு.ச. தலைவர் முருகேசன், பொதுச் செயலாளர் தர்மன், பொருளாளர் முருகன், அமைப்பு செயலாளர் மைக்கேல் நெல்சன், மாநில மருத்துவரணி துணைச் செயலாளர் செண்பகவிநாயகம், மாவட்ட பொருளாளர்கள் சரவணன், ஷெரிப், துணை செயலாளர்கள் மனோகரன் புனிதா, பொதுக்குழு உறுப்பினர் பத்திரம் சாகுல் ஹமீது, ஒன்றிய செயலாளர்கள் கடற்கரை, கிறிஸ்டோபர், பெரியதுரை, நகர செயலாளர்கள் மு.பிரகாஷ் (சங்கரன்கோவில்) அந்தோணிசாமி (புளியங்குடி) நகர அவை தலைவர் முப்புடாதி, துணைச் செயலாளர் முத்துக்குமார், தென்காசி கிளை அமைப்பாளர் திவான் ஒலி, ராமநாதபுரம் ஊராட்சி மன்ற தலைவர் கணேசன், வட்டார போக்குவரத்து ஆய்வாளர்கள் ராஜன், மணிபாரதி மற்றும் அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு கோவை மாநகர் மாவட்டக் கழகத்தின் சார்பில் பீளமேடு பகுதி 49 வது வார்டு பாப்பநாயக்கன்பாளையம், ஸ்ரீ ராமபுரம் பகுதியில் இளைஞர் எழுச்சி நாள் விழாவாக 500 ஏழை எளிய மக்களுக்கு அறுசுவை உணவு மற்றும் நலத்திட்ட உதவிகளை சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக் வழங்கினார். இதில் மா.நாகராஜ், 49 வது வட்டச் செயலாளர் எஸ்.ஜே.தாஸ், வே.பாலசுப்பிரமணியன், இரா.மணிகண்டன், மெட்டல் ராஜாமணி, இரா.தனபால், ப.மோகன்ராஜ், நவீன் முருகன், கே.ஆனந்தகுமார், அன்னக்கொடி எத்திராஜ், இரா.நாகராஜ், ஆடிட்டர் ராஜேந்திரன், சந்திரசேகரன், நடராஜ், சதாசிவம், சுஜாதா, கேபிள் சேகர், சரஸ்வதி, வளர்மதி, மணிமேகலை, ராஜேந்திரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

முறையாக அனுமதி பெற்று மக்கள் சந்திக்கக்கூடிய இடம்:

திருச்சியில் நடிகர் திலகம் சிவாஜி கணேசனுக்கு மாற்று இடத்தில் சிலை!

சட்டப்பேரவையில் அமைச்சர்கள் கே.என்.நேரு - மு.பெ.சாமிநாதன் உறுதி!

சென்னை, ஏப்.24-

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது திருச்சியில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் சிலை திறப்பு குறித்த விவாதம் வருமாறு:-

முனைவர் த.இனிகோ இருதயராஜ்: திருச்சி ராப்பள்ளி பாலக்கரை பிரபாத் திரையரங்கம் அருகில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களுக்கு நிறுவப்பட்ட சிலையைத் திறக்க அரசு ஆவன செய்யுமா?

அமைச்சர் மு.பெ.சாமிநாதன்: தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்க அனுமதி கோருகிறேன்.

உறுப்பினர் டாக்டர் இனிகோ இருதயராஜ் அவர்கள், திருச்சிராப்பள்ளி பாலக்கரை பிரபாத் திரையரங்கம் அருகில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களுக்கு சிலை திறக்கப்படுமா என்ற வினாவினை எழுப்பியிருக்கிறார்கள்.

தற்போது மட்டுமல்ல, உறுப்பினர் அவர்கள் என்னைப் பார்க்கின்ற ஒவ்வொரு முறையும் இந்தக் கோரிக்கையை என்னிடத்தில் கேட்பார்கள். நானும் சிலைக்கும், செய்தித் துறைக்கும் எந்த தொடர்பும் இல்லையென்று அவரிடத்தில் ஏற்கெனவே, பல முறை பதில் தெரிவித்திருக்கிறேன். ஒரு அமைப்பின் மூலமாக, நடிகர் சங்கத்தின் சார்பாக, ரசிகர் மன்றத்தின் சார்பாக அந்தச் சிலை வைக்கப்பட்டிருப்பதாக தெரிகிறது. மேலும் சொல்லவேண்டுமானால், உள்ளூர் அமைச்சராக இருக்கிற நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர், கே.என். நேரு அவர்கள் தான் அங்கு அந்தச் சிலையை அமைப்பதற்காக நிதியை அளித்திருப்பதாக அதிகாரிகள்மூலம் தகவல் தெரிவிக்கப்படுகிறது. எனவே, அந்தவகையில் அவ்விடத்தில் சிலை நிறுவப்பட்டிருக்கிறது. அந்தச் சிலையைத் திறக்கமுடியவில்லை. காரணம், உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு. நெடுஞ்சாலையில் பொது விடங்களில், சாலைகளில் சிலைகளை அமைப்பது, உச்ச நிதிமன்றத்தால் தடை செய்யப்பட்டிருக்கிறது.

நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் ரசிகர் மன்றத்தைச் சேர்ந்தவரும்கூட நீதிமன்றத்திற்கு சென்றபோது அந்த மனு உயர் நீதி மன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. எனவே, இப்படி இருக்கும் பட்சத்தில் cover செய்யப்பட்டு, கட்டி வைக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும், றுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று முதலமைச்சர் அவர்களுடன் கலந்துபேசி, மாவட்ட நிர்வாகம் மற்றும் மாநகராட்சி நிர்வாகத்துடன் கலந்துபேசி, தக்க இடத்தைத் தேர்வு செய்து, அந்தச் சிலை மாற்று இடத்தில்

நிறுவப்பட்டு, சிலை திறப்பதற்கான நடவடிக்கைத் துறையின் சார்பில் எடுக்கப்படும்.

முனைவர் த. இனிகோ இருதயராஜ்: நடிப்பாற்றல் திறனால், உலகெங்கும் வியாபித்திருக்கும் தமிழர்களின் மனங்களிலே வாழ்கின்ற தமிழ்நாட்டிலுள்ள ஓர் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த, சுதந்திரப் போராட்ட தியாகியின் குடும்பத்தைச் சேர்ந்த தமிழ்நாட்டினுடைய Super Star ஆக விளங்கியவர்தான் கணேசமூர்த்தி என்கிற நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள். தமிழ்நாட்டினுடைய முன்னாள் முதலமைச்சரும், நம்மையெல்லாம் வழிநடத்திக் கொண்டிருக்கிற முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் புரட்சிகரமான வசனங்களை உயிர்பெற வைத்தவர் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள். இத்தகைய பெருமைக்குச் சொந்தக்காரரான நடிகர் திலகம் வாழ்ந்த ஊர், எனது தொகுதியான திருச்சி சங்கிலியாண்டபுரம். அவர் நாடகக் கலையை கற்று நடிக்க ஆரம்பித்த ஊர் திருச்சி. எனவே, அவருடைய புகழைப் பரப்புகின்ற வகையிலே அவருடைய திருவுருவச் சிலையை திருச்சியில் நிறுவ வேண்டும் என்பது அவருடைய ரசிகர்களின் நீண்டகால கனவு மற்றும் ஆசையாகும். அந்த ஆசையை நிறைவேற்றுகின்ற வகையில், திருச்சி மாநகராட்சியுடன் தீர்மானத்துடன்தான் 9 அடி கொண்ட முழு உருவ திருவுருவ வெண்கலச் சிலையை சுவாமி மலை ஸ்தபதி ஸ்ரீகண்டன் அவர்களை அழைத்து, சிலை செய்ய சொல்லி, அதற்கான முழுச் செலவையும் ஏற்றுக்கொண்டவர் நகராட்சித் துறை அமைச்சர் நேரு அவர்கள். ஆட்சி மாற்றத்தின் காரணமான அவர்கள் வாங்கிக் கொடுத்தார் என்பதற்காகவும், பத்து ஆண்டுகளாக ஒரு மாபெரும் கலைஞனுடைய சிலையை திறக்காமல், சாக்கு பையால் மூடப்பட்டு கிடக்கிற ஒரு கொடுமையான சூழ்நிலை. சிவாஜி மன்றத்தைச் சேர்ந்த சீனிவாசன் மோகன் பாலாஜி என்பவர் 2018ல் தொடர்ந்த வழக்கில், மதுரை உயர் நீதிமன்றம் என்ன அறிவுறுத்தியிருக்கிறது என்றால், சிலையை நகரின் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் நிறுவி, மரியாதை செலுத்த வேண்டும் என்று அறுவுறுத்தியிருக்கிறது. எனவே, இச்சிலையை இப்போதுள்ள பாலக்கரை ரவுண்டானா பகுதி கால்நடை மருத்துவமனைக்கு அருகிலோ. . .

அல்லது சத்திரம் bus stand பகுதியிலோ, காமராஜர் சிலை பின்புறமோ Sona Mina theatre அருகிலுள்ள roundtana பகுதியிலோ அமைத்துத் தர வேண்டும்.

அமைச்சர் மு.பெ. சாமிநாதன்: உச்ச நீதிமன்றத்தின் அறிவுரையின்படி, ஏற்கெனவே முத்தமிழறிஞர் ஐயா கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் அன்றைக்கு நான் நெடுஞ்சாலைத் துறை அமைச்சராக இருந்தபோது, அதற்கான NOC தடையில்லா சான்றிதழில் நானும் கையெழுத்திட்டேன். கடற்கரை சாலையிலே வைக்கப்பட்டது.

காமராஜர் ஐயா பெயர் உள்ள சாலையில், DGP office அருகில் வைக்கப்பட்டது. அதன் பிறகு, உச்ச நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் அந்தச் சிலையை எடுக்க வேண்டிய சூழ்நிலையாகிவிட்டது. நீதிமன்றத்திற்கு நாம் கட்டுப்பட வேண்டிய சூழ்நிலை உருவாகியது. எனவே, உச்ச நீதிமன்ற தீர்ப்பின்படி அந்தச் சிலையை கொண்டு சென்று மணிமண்டபத்தில் மாற்றி வைக்கப்பட்டது. அதன்பிறகு, இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, முதலமைச்சர் அவர்கள், ஒருமுறை அந்தச் சிலையைப் பார்த்துவிட்டு சிலை பழுதடைந்திருக்கிறது. புதிய சிலை வைக்க வேண்டும் என்று சொன்னார்கள். புதிய சிலை செய்து, சிறப்பாக அது மணிமண்டபத்தின் வெளியில், மக்கள் பார்வைபடக் கூடிய வகையில் வைக்கப்பட்டு, முதலமைச்சர் அவர்களால் திறக்கப்பட்டு, ஆண்டுதோறும் விழா கொண்டாடப்பட்டு வருகிறது. எனவே, முத்தமிழறிஞர் ஐயா கலைஞராக இருந்தாலும்சரி, இன்றைய முதலமைச்சர் அவர்கள் அண்ணன் தளபதியாக இருந்தாலும்சரி, நம்முடைய நடிகர் திலகம் சிவாஜி கணேசன்மீது பற்று கொண்டவர்கள். ஒரு குடும்ப பாசத்தோடு அவர்கள் இருவரும் இருந்தவர்கள். எனவே, அந்த வகையிலே திருச்சியிலே முறையாக முதலமைச்சர் அவர்களின் அனுமதியைப் பெற்று, மக்கள் சந்திக்கக்கூடிய, அதிகம் பார்க்கக்கூடிய இடமாகத் தேர்வு செய்யப்பட்டு, உள்ளாட்சித் துறை, மாநகராட்சியினுடைய தீர்மானத்தைப் பெற்று, மறுதீர்மானத்தைப் பெற்று மாவட்ட நிர்வாகத்தினுடைய ஒத்துழைப்போடு உரிய இடத்தில் முதலமைச்சர் அவர்களிடத்தில் கலந்தாலோசித்து, முறையாக சிலை நிறுவப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேருந்து நிலையத்தி லிருந்து மார்க்கெட் பகுதிக்கும், அரசு ஊழியர்கள் அதிகமாக வசிக்கின்ற பகுதிகளான என்.ஜி.ஓ. காலனி, பெருமாள்புரம் ஆகியவற்றில் மக்கள் நெருக்கம் இருப்பதால், அந்தப் பகுதிகளுக்கு mini buses அதிகமாக தேவைப்படுகின்றன. அப்பகுதிகளுக்கு mini buses இயக்குவதற்கு அரசு முன்வருமா என்பதைக் கேட்டு அமர்கின்றேன்.

அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர்: உறுப்பினர் அவர்கள் கோரிய வழித்தடங்களை மிகத் தெளிவாக எழுதிக் கொடுப்பாரேயானால், அதிகாரிகள் மூலமாக ஆய்வு செய்து, விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

மிசா புலவர் வேங்கைமார்பன்

ஏப்ரல் 24 (1985)

அன்றைய தென்னார்க்காடு மாவட்டத்தின் கழகப் பிரச்சாரக்குழு தலைவராகப் பணியாற்றியவர்.

தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரின் அன்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த பல்வேறுப் போராட்டங்களில் பங்கேற்றதுடன், 1965இல் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்று, வேலூரில் ஓராண்டு சிறைவாசமும் – நெருக்கடி காலத்தில் மிசா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சென்னையில் ஓராண்டு சிறைவாசமும் அனுபவித்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.